# நினைவு மலர்



அமரர். திரு.நடராஜா இராஜகுமாரன்

யாழ்ப்பாணம் / கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவனடி சேர்ந்த
# அமரர்
# திரு. நடராஜா - இராஜகுமாரன்
அவர்கள்



**தோற்றம்**
03-09-1946

**மறைவு**
15-04-1999

திதி நிர்ணயவெண்பா


தேயமிதில் பிரமாதி ஆண்டதனி, லபர
தூயதாம் சித்திரைச் சதுர்த்தசியில் - நேயமொடு
சிரம பேதமின்றி சீருடைய இராஜகுமாரன்
பரமபத மடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The sudden and untimely passing away of Nadarajah Rajakumaran at the comparatively young age of 52, came as a shock to his family memebrs and wide circle of friends after his early education at St.John's College, Jaffna. He obtained his professional qalification in Accountancy and was working as an Accountant. My association with Rajakuman over the years became more intimate when his son Suhan came under my tutelage at St. Thomas College Mt.Lavinia. He was deeply concerned about Suhan's education and took just pride in his son's achievements.

He was a good and devoted husband and ideal father. I know that his passing away is unbearable to his loyal and dignified partner, son Suhan, and daughter Subitha.

I pray th God will give them the strength to bear their grief. His friends will always remember him for his affability and charm. He was specially endowed with the ability to please all those who moved with him. He has left a vacuum that cannot be filled.



**G.J. Arulanantham** B.A. (Cey), Dip in Edu.

**Head Master, Upper School**

**S. Thomas College, Mt Lavivia.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம் :-

மீளா அடிமை உமக்கேயாளாய் பிறரை வேண்டாதே
மூளா தீப்போ லுள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கு மடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

திருவாசகம் :-

பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்து பொன்மேனி பாடுதுங்கான் அம்மானாய்.

திருவிசைப்பா :-

தன்னடி நிழற்கீ ழென்னையுந் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
யென்னிடக் கமல மூன்றினுட் டோன்றி
யெழுஞ்செழுஞ் சுடரினை யருள்சேர்
மின்னெங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்கு வெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டு கொண்டேனே.

திருப்பல்லாண்டு :-

குழலொலி யாழொலி கூத்தொலி
யேத்தொலி யெங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகு திரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழி வழி
யாளாய் மணஞ் செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடியெம்
மானுக்கே பல்லாண்டு கூறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புராணம் :-

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

திருப்புகழ் :-

எருவாய் கருவாய் தனிலே யுருவா
மிதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
மிதுவே தொடர் பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பல கோடிதா
யுடனே யவமா யழியாதே
ஒரு கால் முருகா பரமா குமரா
உயிர் காவெனவோ தருள் தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே விருது தாள் புனை வோனே
முனிவோ சமரோர் முறையோ வெனவே
முது சூருரமேல் விடும் வேலா
திருமால் பிரம்மா அறியா தவச்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழமா மதில் சோரழகார் பொழில் சூழ்
திரு வீழியில் வாழ்பெருமாளே.

வாழ்த்து :-

வான்முகில் வழாஅது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப முனிவர் அருளிய

# காரிய சித்தி மாலை

திருச்சிற்றம்பலம்

பந்தம் அகற்றும் அனந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதித்திடுமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரத்திடுமோ
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்தஇறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுதிடுவோம்!

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவன் அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்தே சரணம் அடைகின்றோம். !

இடர்கள் முழுதும் எவனருளால்
எரி வீழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தம் ஆகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன யாவன் விறங்கும்வர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.!

மண்ணில் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர், இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக் கணபதியை
அன்பால் சரணம் அடைகின்றோம்.!

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பிணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்திகளில் தோத் திரஞ் செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்
தினம் உச்சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டும் தினந்தோறும்
திகழஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கு உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப்பினர் மறைந்தார்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம்தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணு தலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணு தற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லையிலாதானே நின்பெருஞ்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோடு ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து ள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத்தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்குவந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் மலையானே போற்றி போற்றி

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட னன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி யென்சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குத் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பேராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணின் இசையாக நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கு மேலாக நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத் தணைந்தாய் போற்றி
ஊழியே ழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல்நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி

நீள அகலம் உடையாய் போற்றி

அடியும் முடியும் இகலிப் போற்றி

அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி

கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி

கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி

கடிய உருமொடு மின்னே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி

உண்ணா துறங்காது திருந்தாய் போற்றி

ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி

எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி

இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி

பண்ணார் இசையின்சொற் கேட்டாய் போற்றி


பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி

கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி

*அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும்*

*கைகூடாது. பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதாரப் பதிகம்

1. தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டு பாட மயிலாட மான்கன்று துள்ளவரிக்
கொண்டைபாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே

2. பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொடாறும் விரிந்தார்க்கிடம்
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாட மடமந்தி கேட்டு மகிழும் கேதாரமே

3. முந்திவந்து புரோதாய மூழ்கி முனிகள் பலர்
எந்தை பெம்மானென நின்றிறைஞ் மிடமென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ் சடையெந்தை கேதாரமே

4. உள்ளமிக்கார் குதிரை முகத்தார் ஒருகாலர்கள்
எள்கலில்லா இமையோர்கள் சேரும் மிடமென்பரால்
பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப்பிரியாது போய்
கிள்ளை யேனற் கதிர்கொணந்து வாய்ப்பெய்யுங் கேதாரமே

5. ஊழியூழி யுணர்வார்கள் வேதத்தினொண் பொருள்களால்
வாழியெந்தை யென வந்தி றைஞ்சும் மிடமென்பரால்
மேழிதாங்கி உழுவார்கள் போலவ்விரை தேறிய
கேழல் பூழ்தி கிளைக்க மணிசிந்தும் கேதாரமே

6. நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தையுடையார்கள் சேரும் மிடமென்பரால்
ஏறிமாவின் கனியும் பாலாவின்னிருஞ் சுளைகளும்
கீறிநாளும் முசுக்கிளையொடுண்டுகளுங் கேதாரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மடந்தை பாகத் தடக்கிம் மறையோதி வானோர் தொழத்
தொடர்ந்த நம்மேல் வினைதீர்க்க நின்றார் க்கிடமென்பரால்
உடைந்த காற்றுகதுயர்வேங்கை பூத்துதிரக்கல் லறைகண்மேல்
கிடந்த வேங்கை சினமாமுகஞ் செய்யுங் கேதாரமே

8. அரவமுந்நீ ரணியிலங்கைக் கோனையரு வரைதனால்
வெருவவூன்றி விரலால் அடர்த்தார்க் கிடமென்பரால்
குரவங்கோங்கங் குளிர்பிண்டி ஞாழல்சுர புன்னைமேல்
கிரமாக வரிவண்டு பண்செய்யுங் கேதாரமே

9. ஆழ்ந்துகாணார் உயர்தெய்த கில்லார் அலமந்தவர்
தாழ்ந்து தந்தம் முடிசாய நின்றார் கிடமென்பரால்
வீழ்ந்து செற்று நிழற்கிறங்கும் வேழத்தின் வெண்மருப்பினைக்
கீழ்ந்து சிங்கங் குருகுண்ண முந்துதிருங் கேதாரமே

10. கடுக்கள் தின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பார் அவரெய்த வொண்ணா இடமென்பரால்
அடுக்க நின்றவ் வறவுரைகள் கேட்டாங் கவர்வினைகளைக்
கெடுக்கநின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே

11. வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏயந்த நீர்க்கோட்டிமையோர் உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள் பத்துமிசை வல்லவர்
வேந்தராகி உலகாண்டு வீடுகதி பெறுவரே.

விண்ணில் ஒளியாய் விளக்கினில் சுடராய்
வெயிலவன் கதிர்என விளங்கும்
மண்ணினில் உருவாய் மணியினில் ஒலியாய்
கண்ணினில் மணியாய் கருத்திகில் கலந்திடும் குழையாய்
எண்ணின் அமையாய் ஈசனே சிவமே
எம்பெரும் வினைகளை எரிக்கநல்குமோ
கருணை நண்ணுமோ அறியேன் நாடிடும் கௌரியம்பரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லலிதா நவராத்திரி மாலை

முருகப் பெருமானிற்கும் சூரனிற்கும் பலத்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சூரபன்மனை சம்ஹாரம் செய்ய முடியாமல் திணறுகிறான் முருகப்பெருமான். அன்னையை நினைத்தான். அவ்வேளையில்...........

அன்னை அவன் முன்னே தோன்றினாள்.
சக்தியும் சிவனும் இணைந்து தான் சூரனைக் கொல்ல வேண்டும் என்று தன்னையே ஒரு வேலாக மாற்றிக் கொடுத்தாள்.
அதன் துணையோடு சூரன் சம்ஹாரிக்கப்படுகின்றான்.
அன்னையின் இந்தச் செயலை நினைத்து
முருகப்பெருமான் தன் அழகிய தமிழால் பாடுவான்
பின்பு அதை அகத்தியருக்கு உபதேசிக்க
அகத்தியரால் இது பூலோக மக்கள் அன்னையின் அருள் பெற வேண்டுமென எமக்கு அருளி உபதேசித்தார்
இது சிவகுமாரனாலேயே படைக்கப்பட்ட சக்தி கொண்டது.
பாடிப் பலன் பெறுக.

ஆக்கும் தொழில் ஐந்து அரன் அற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கண நாயக வாரணமே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

கற்றும் தெளியார் காடேகதியாய்
கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெளியார் நிலையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப்படைவாள் வயிரப்
பகைவர்க்கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலக்கனலே சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே !

முத்தேவரும் முத்தொழிலாற்றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம் சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய்நீ
சாகா வரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக்கிணை வாழ்வடைவேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

அந்தி மயங்கிய வான வதானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தைநிறம் பவளம் மொழியாரோர்
தேனபொழிலாமீது செய்தவள் யாரோ
எந்தயிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்குள் எண்ணமிருந்தாள்
மந்திரவேத மாயப்பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

காணக் கிடையாக் கதியானவளே
கருதக்கிடையாய் கலையானவளே
பூணக்கிடையாப் பொலிவானவளே
புனையக்கிடையாப் புதுமைத்தவளே
நாணித்திரு நாமமும் நின் துதியும்
நலிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரிதபதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அர ஹர சிவ என்றடியவர் சூழும்
அவரருள் பெற அருளமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
சூழல்வாய் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய் ஓம் லலிதாம்பிகையோ

ரஞ்சினி நந்தினி அங்கனி பதும
ராக விகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணீ
சாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சல மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையாறொலி யொத்த விதால்
நிலையற் றெளியேன் முடியத்தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அளவற் றசைவற் றநுபூதி பெறும்
அடிவார் முடிவாழ் வைடூரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையோ

பயன்:

எவர் எத்தினமும் இசையாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எல்லாம் அடைவார்
சிவரத்தின மாய் திகழ்வா ரவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம்

அமரர் இராஜகுமாரன் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தியாறாம் ஆண்டு யாழ் நகரில் கொக்குவில் பதியில் திரு. நடராஜன் தம்பதியினருக்கு, அவர்கள் செய்த தவப்பயனால் உதித்த உத்தம புத்திரன். இவர் பண்பிலும், பணிவிலும், பரிவிலும், பொது நல சேவைகளிலும் கற்றோராலும்,மற்றோராலும் போற்றப்பட்டவர். இவர் மலாயன் வியாபார நிறுவனத்தின் சிறந்த கணக்காளராகக் கடமை புரிந்த தகுதியாளர்.

இவருடைய மகள் சுபிதா இராஜகுமாரன் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபராக கடமை புரியும் எனக்கு அவருடன் அடிக்கடி பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பெற்றோர், ஆசிரியர் சங்கங்களுக்கு தவறாமல் சமூகமளித்து கல்லூரியில் இருக்கும் குறைநிறைகளைக் கவனித்து அதை நிவர்த்தி செய்வதற்கு அரும்பாடுபட்டமதிப்புக்குரியவர் இவர்.

அன்றொருநாள் கொழும்பு மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்ட வேளை, எமது பாடசாலை மாணவர்கள், விடுதி மாணவர்கள் அவதியுற்றனர், அல்லற்பட்டனர். மின்விநியோகமும் தடைப்பட்ட அந்த இக்கட்டான வேளையில் நாம் எதிர்பாராத விதமாக தெய்வம் போல் இராஜகுமாரன் இங்கு வந்தார். நிலைமையை உணர்ந்து உடன் செயற்பட்டு தன் செல்வாக்கை பிரயோகித்து குழாய்க்கிணறு மூலமாக நீர் கிடைக்க வகை செய்தார். சகல மாணவிகளுக்கும், எனக்கும் ஏற்பட்ட ஆனந்தம் சொல்லிலடங்காது. "காலத்தினால் செய்த நன்றி" என்றென்றும் எம் நெஞ்சை விட்டகலாது. அவர் மீளாத் துயிலில் ஆழ்ந்த போதிலும் அவர் செய்த உதவி எம்மூச்சுள்ளவரை எம்மால் மறக்க முடியாதது. சமூகத்தில் பொது நலவாதியாக இலங்கிய பேராளன் பல வழிகளிலும் இன்னோரன்ன பல உதவிகளைச் செய்தவராவர். 'மக்கள் சேவை மகேசன் சேவை' என வழி நடந்த சிறந்த மனிதரான இராஜகுமாரன் இறை பதம் அடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு நான் ஆறாத்துயரில் ஆழ்ந்துவிட்டேன். அவர் ஆத்மா சாந்தி பெற நாமும் பிரார்த்திப்போமாக! அவர் குடும்பத்தவர்களுக்கு என் சார்பிலும், எனது பாடசாலை சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.G.பாலச்சந்திரன் (அதிபர்)
இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு - 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் வாக்கு

1) எண்ணத்தால் உண்டாகும் பாவம் எண்ணிறைந்தவை.

2) உள்ளத்தில் ஈஸ்வரனை அடைந்தவர் அடையாளம் பற்றி கீதையில் கண்ணன் கூறுகிறார்: சூரியனுடைய ஒளிமுகப் பிரகாசம், சுயநலம் கருதாமல் பரிசுத்தம், சகிப்புத் தன்மை, அன்பு, ஆலயத்துள் மௌன விரதம் என்பன தலைசிறந்தன.

3) அடியவருக்குத் துன்பம் பயிருக்கு உரம் போல்.

4) தொண்டு எல்லோரும் செய்ய முடியாது ஊழ்வினை பெரிது.

5) எல்லோருக்கும் தாகம் தீர்க்குமிடம் ஆலயம் (பதஞ்சலி).

6) மனவலிமையால் மரணத்தையும் தள்ளிப் போட முடியும்.

7) துன்பப்படுவோர்க்கு ஆறுதல் கூறினால் பெரும்பேறு.

8) நாமே நம்மை பரீட்சை பண்ணுவது எப்படி? தூக்கத்திலும் தியானம் வருமா, இறைநாமம் உச்சரிக்கிறோமா, கொடை திருவுலாக்காட்சி வருமா, பயம் வருமா தீய எண்ணம் வருகின்றனவா என,

9) வேதம் முழுவதும் மந்திரம் நிரம்பி உள (வேதம் நான்கிலும் நாதன் நாமம்).

10) ஆதிசஸ்கர்:- குருடன் தீயகாரியம் செய்யாதவன், செவிடன் நல்லத்தைக் கேளாதவன், ஊமை இனிய வார்த்தை பேசாதவன்.

11) ஆயுதம்:- ஆத்மாவை வெட்டாது, தீ எரிக்காது, நீர் நனைக்காது, காது உலத்தாது, போரில் மடிந்தால் விண்உலகம் சுவர்க்கம்.

12) நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாதிரு

(விவேகானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

திரு. இராஜகுமாரன் அவர்களின்
பிரிவுகேட்டு வந்து உடன் இருந்து
தேற்றிய உற்றார், உறவினர், நண்பர்கட்கும்.
கடைசிவரை நின்று தகனக்கிரியைகளில்
பங்குகொண்டோருக்கும்.
நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல்
கூறிய உறவினர், நண்பர்கள், அன்பர்கள்,
அனைவருக்கும், அமரரின்இறுதிக்
கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்,
சகலவழிகளிலும் உதவி புரிந்த அனைத்து
அன்பு உள்ளங்களுக்கும் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறோம்

**இங்ஙனம்**
**மனைவி, மக்கள்**

# ACKNOWLEDGEMENT

We sincerely thank all relatives and friends
Who attended the funeral of our beloved father,
sent messages of sympathy and participated
in the religious rites and helped in various
ways for the successful performance
of these ceremonies.



**FAMILY MEMBERS**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நம்பிக்கை கொள் கடவுளை நம்பி இரு.
பின்னர் நீயாக எதையுமே வேண்டி யிராது.
பிள்ளையார் உன் பொருட்டு யாவற்றையும் தாமே செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org